Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 5-6-1985 புதன்கிழமை (வைகாசி 23 நம்மாள் 15) முழக்கம் 120

## "பொறுமையுடன் இருங்கள்!" ஜனாதிபதியின் வேண்டுகோள்

இந்தியத் தலைவர்களுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் அரசாங்கம் அவசியமான நடவடிக்கைகளை எடுத்து வரும் அதேவேளையில் மக்கள் பொறுமையுடன் இருக்க வேண்டும் என ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்று நடைபெற்ற அரசாங்க கட்சி பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்தார். அரசாங்கப் பாராளுமன்றக் குழு உறுப்பினரும் பொது வாழ்க்கையில் ஈடுபட்ட அனைவரும் தனது இந்த வேண்டுகோளுக்கு அமைய நடப்பது அவசியம் என்றும் ஜனாதிபதி சொன்னார். இந்தியாவில் இருந்து கொண்டு, இலங்கைக்கு எதிராக தீவிரவாதிகள் எடுக்கும் நடவடிக்கைகளை ஆதரிக்கப் போவதில்லை என இலங்கை இந்திய தலைவர்கள் இணங்கியிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# நானூறு இலங்கை தமிழர்களையும் இங்கு திருப்பி அனுப்புவதில்லையென சுவிஸ் அரசாங்கம் முடிவு

(சுவிஸ்)

சுவிட்சர்லாந்தில் அனுமதி மறுக்கப்பட்ட சுமார் நானூறு இலங்கைத் தமிழர்களையும், திருப்பி அனுப்புவதில்லை என்று சுவிட்சர்லாந்து அரசாங்கம் இப்போது தீர்மானித்துள்ளது.

சுவிட்சர்லாந்துக்கு இலங்கையிலிருந்து சென்ற ஏறத்தாழ மூவாயிரம் தமிழர்களில், சுமார் நானூறு பேருக்கு பல்வேறு காரணங்களால் புகலிடம் மறுக்கப்பட்டு, இவர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று உத்தியோகபூர்வமாக சில மாதங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஐக்கிய நாடுகள் அகதிகள் கமிஷன் உட்பட பல்வேறு ஐரோப்பிய நாட்டு பொது ஸ்தாபனங்கள் எதிர்ப்புத் தெரிவித்து மனிதாபிமான அடிப்படையில் நானூறு பேருக்கும் அரசியல் புகலிடம் வழங்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்திருந்தன.

இவர்களது கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டும், இலங்கையில் நிலைமை மோசமடைந்து வருவதைக் கருத்தில் கொண்டும், சம்பந்தப்பட்ட நானூறு பேரையும் திருப்பி

—4-ஆம் பக்கம் பார்க்க

★ இந்திய விஜய பெறுபேறுகள் பற்றி 'ரூபவாஹினி' பேட்டியில் லலித்:

# பயங்கரவாதம் நின்றால் மட்டும் அரசியல் தீர்வு சாத்தியமாகும்!

## தலைவர்கள் முடிவெடுத்த பின் மக்கள் தீர்ப்புப் பெறுவோம்!

(கொழும்பு)

பயங்கரவாதம் ஒழிக்கப்படும் சூழ்நிலையை உருவாக்குவதே எமது முதல் முயற்சி பயங்கரவாதம் ஒழிக்கப்பட்ட பின்னரே அரசியல் தீர்வு சாத்தியமாகும். இதற்கு இந்தியாவினால் நிச்சயமாக உதவமுடியுமென்று அமைச்சர் லலித் அத்துலத் முதலி நேற்றிரவு - ரூபவாஹினிக்கு அளித்த விசேஷ பேட்டியில் தெரிவித்தார்.

நாம் எடுக்கும் அரசியல் தீர்வுக்கு முதலில் நாட்டின் அரசியல் தலைவர்கள் சம்மதம் தெரிவிக்கவேண்டும். அதன் பின்னரே மக்கள் அபிப்பிராயம் அல்லது மக்கள் தீர்ப்புப் பெறப்படுமென்றும் அமைச்சர் இங்கு சுட்டிக்காட்டினார்.

"டில்லியில் இரு நாட்டுத் தலைவர்களும் அந்தரங்கமாக நடத்திய பேச்சுக்களை வெளி

—4ஆம் பக்கம் பார்க்க

## பயமுறுத்தல்; எச்சரிக்கை; கல்வீச்சு
# கொழும்பு பஸ்கள் திரும்பின

கொழும்பு யாழ்ப்பாணம் பாதையில் நடைபெறும் அசம்பாவிதங்கள், கல்வீச்சுகள், பயங்கர எச்சரிக்கைகள் காரணத்தால் இரு பகுதிகளுக்குமிடையிலான வாகனப்போக்குவரத்துகள் முற்றாக ஸ்தம்பிதமடையும் நிலை உருவாகி வருகின்றது.

றம்பாவை பகுதியில் நேற்று ஆயுதங்கள் சகிதம் கூட்டமாக நின்றவர்கள் காரணத்தால் யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றுக்காலை கொழும்புக்குச் சென்ற பஸ்கள் திரும்பி வந்தன.

கொழும்பிலிருந்து வந்த மூன்று பஸ்கள் வழியில் நடந்த சம்பவங்கள் காரணத்தால் போதிய பாதுகாப்புடன் வவுனியா வரை கொண்டு வந்து விடப்பட்டதாகக் கூறப்படுகின்றது. ஆனாலும் மற்றொரு கொழும்பு பஸ் நேற்றிரவு யாழ்ப்பாணம் வந்து சேரவில்லை. வழியில் எங்காவது இது தரித்து நிற்கலாமென எதிர்பார்க்கப்பட்டது.

அதே வேளை சில பஸ் நிறுவனங்கள் மறு அறிவிப்பு வரை யாழ்—கொழும்பு சேவையை ரத்துச் செய்துள்ளன. சில நிறுவனங்கள் 250 ரூபாவரைக்கும் கட்டணத்தை உயர்த்தியுள்ளன.

# பன்குளத்தில் 13 தமிழர் படுகொலை 4 சடலங்கள் இன்று வருகின்றன

(திருமலை)

திருமலையிலிருந்து நேற்று முன்தினம் காலை பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்ட வடபிரதேச போக்குவரத்துச் சபை பஸ் இனம் தெரியாத ஆயுதபாணிகளால் பன்குளத்தில் வைத்து கடத்தப்பட்டு, பஸ்ஸிலிருந்த 13 பேர் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மரணமானவர்களில் ஒன்பது பேர் திருமலையைச் சேர்ந்தவர்கள். இவர்களது சடலம் நேற்று பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

மரணமான மற்றைய நால்வரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களாவர். உடுப்பிட்டி செல்வி பரமேஸ்வரி

— 4 ஆம் பக்கம் பார்க்க

## 62 பூசா இளைஞர் இன்று விடுதலை

பூசாவில் தடுத்து வைக்கப்பட்ட இளைஞர்களில் மேலும் 62 பேர் இன்று விடுதலை பெற்று வருகின்றனர். ராணுவ

—4ஆம் பக்கம் பார்க்க

புதிய கட்டுப்பாடுகளினால்

# இலங்கை தமிழர் பிரிட்டன் செல்வது குறைந்துள்ளது

(லண்டன்)

இலங்கைத் தமிழர்கள் பிரிட்டனுக்கு வந்து புகலிடம் பெறுவதில் ஏற்படுத்தப்பட்ட புதிய கட்டுப்பாடுகள் அவர்கள் வருகையைப் பொறுத்த வரையில் ஓர் மாற்றத்தை உண்டு பண்ணியிருப்பதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டனுக்கு வரும் இலங்கைத் தமிழர்களுக்கு 'விஸா' வேண்டும் என்பது கட்டாயப் படுத்தப்பட்டிருப்பது இலங்கையிலிருந்து வரும் தமிழர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தியிருப்பதாக பிரிட்டனின் உள்துறை அமைச்சர் திரு லியோன் பிரிட்டன் கூறியிருக்கிறார்.

- 4 ஆம் பக்கம் பார்க்க

சபையில் அமைச்சர் டென்ஸில்:

# பரந்தன் தொழிற்சாலை நிரந்தரமாக மூடப்படாது!

(கொழும்பு)

"பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சாலை பாதுகாப்பு நோக்கம் கருதியே தற்காலிகமாக மூடப்பட்டது; தொழிற்சாலையை நிரந்தரமாக மூடிவிடுவதற்கு எடுக்கப்பட்ட ஒருநடவடிக்கையாக இதனைக் கருதக்கூடாது" என்று கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் டென்ஸில் பெர்னாண்டோ நேற்றுப் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

"இரசாயனத் தொழிற்சாலையை இயன்றளவு விரைவில் மீண்டும்திறப்பதற்கும் தொழிலாளர்களுக்கான ஊதியத்தை வழங்குவதற்கும் இப்போது நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என பரந்தன் இர

—4ஆம் பக்கம் பார்க்க

# வெளியூரிலிருந்து 10 லீற்றர் எரிபொருளை எடுத்து வருவதற்கு இன்று முதல் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டை ஓரளவு நீக்கும் பொருட்டு யாழ் மாவட்டச் செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு வி. எம் பஞ்சலிங்கம், யாழ். மாவட்ட இணைப்பதிகாரி பிரிகேடியர் வணசிங்காவுடன் கலந்தாலோசனை செய்ததன் பலனாக புதிய திட்டமொன்று உடனடியாக நடைமுறைக்கு வருகின்றது

ஒரு வாகனச் சொந்தக்காரரினால் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட வேறொருவரினால், பிற மாவட்டங்களில் இருந்து பத்து லீற்றர் பெற்றோல் அல்லது டீசல் கொள்கலன் மூலம் கொண்டு வரப்படுவதற்கு ராணுவ அதிகாரியினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

எரிபொருள் கொண்டு வருபவர், வாகனத்திற்கு 1985ம் வருடத்திற்கு வருமான வரியைச் செலுத்திய உத்தரவுப் பத்திரத்தையும், பொலிஸ் அத்தியட்சரிடம் இருந்து வாகன உடைமைக்கும், பாவனைக்கும் வழங்கப்பட்ட பத்திரத்தையும், தனது தேசிய அடையாள அட்டையையும் வைத்திருக்க வேண்டும்.

இவ்விதம் எரிபொருள் கொண்டு வருவதற்கு எவ்வித தடையோ கட்டுப்பாடோ பாதுகாப்பு முகாம்களில் இருக்கமாட்டாது என பிரிகேடியர் உறுதியளித்துள்ளார்.

## இரவல் நூல்களை நல்லூரில் ஒப்படையுங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மா நகர சபை பொது நூலகத்திலிருந்து இரவலாக நூல்களைப் பெற்றவர்கள் அவற்றை நல்லூர் கிளையில்

—4-ஆம் பக்கம் பார்க்க

ஈழமுரசு

## யாழ். தீயணைக்கும்படை யந்திரம் கனடிய தூதரகப் பாதுகாப்பில்!

யாழ். மாநகர சபைக்கென கொள்முதல் செய்யப்பட்ட தீயணைக்கும் படை இயந்திரம் கொழும்பிலுள்ள கனடாவின் தூதரகப் பாதுகாப்பில் இப்பொழுது வைக்கப்பட்டுள்ளது. நாட்டு நிலைமையும், போக்குவரத்தும் இப்பொழுது சீராக இல்லாததனால் இதனை உடனடியாக யாழ்ப்பாணம் கொண்டுவர முடியாதிருப்பதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. சி. வீ கே. சிவஞானம் தெரிவித்தார். நிலைமை சீரானவுடன் இவற்றை யாழ்ப்பாணம் கொண்டுவர உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் ஆணையாளர் குறிப்பிட்டார்.

யாழ். பிரஜைகள் குழு மகஜர்:

# நெருக்கடிகளை குறைக்க ஜனாதிபதிக்கு 7 ஆலோசனை

உயர் அதிகாரிகள் எவ்வளவு தான் உறுதிமொழிகள் அளித்தாலும் தமிழ் மக்கள் தினமும் பதற்றத்தின் மத்தியிலேயே வாழ வேண்டிய அச்சநிலை ஏற்பட்டுள்ளதென்றும், இதனை நீக்க சில வழிவகைகளையும் சுட்டிக்காட்டி யாழ். பிரஜைகள் குழு ஜனாதிபதிக்கு நீண்ட மகஜரொன்றை அனுப்பி வைத்துள்ளது.

தலைவர் பேராசிரியர் கே. சிவத்தம்பி, செயலாளர் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் ஆகியோரால் ஒப்பமிடப்பட்டு அனுப்பப்பட்ட இம்மகஜரில் பின்வரும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன:

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும்.

பொதுமக்களின் உயிரையும் உடைமையையும் காப்பாற்ற சாதாரண சட்டத்தை அமுல் செய்ய வேண்டும்.

வட, கிழக்கு மாகாண மக்கள் விகிதாசாரத்தை மாற்ற புது நடவடிக்கை எதனையும் எடுக்கக் கூடாது.

சிவில் நிர்வாகத்தை அமுலுக்குக் கொண்டுவருவதுடன் இராணுவம், கொமாண்டோ ஆகியவைகளை ஒரு இடத்திலேயே நிறுத்தி வைக்க வேண்டும்.

மீனவரைக் கடலில் மீன் பிடிக்க மீண்டும் அனுமதிக்க வேண்டும்.

ஊரடங்கை ரத்துச் செய்து, வீதிப் பாவனைத் தடைகளை நீக்க வேண்டும்.

தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களில் குற்றம் எதுவுமில்லாதவர்களை உடன் விடுதலை செய்யவேண்டும்.

## நெடுந்தீவு இன்று மாநாடு

நெடுந்தீவு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்கான சகல திணைக்கள அதிபர்களதும் மாநாடு இன்று காலை கச்சேரியில் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறும்.

### பன்குளத்தில்....

—1ஆம்- பக்கத்தொடர்

குமாரசாமி, திக்கத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் வல்லிபுரநாதன், பருத்தித்துறையைச் சேர்ந்த சுப்பிரமணியம், அச்சுவேலியைச் சேர்ந்த தம்பிராசா (பஸ் சாரதி) ஆகிய நால்வரது சடலங்களும் இ.போ. ச. பஸ் மூலம் இன்று யாழ்ப்பாணம் வருமென அறிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த ஒன்பதுபேரும் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். இச்சம்பவத்தின்போது காட்டுக்குள் ஓடித் தப்பிய ஒருவர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

### 62 பூஸா....

—1ம்- பக்கத் தொடர்

பாதுகாப்புடன் வவுனியா வரை வரும் இவர்களை அங்கிருந்து பொறுப்பேற்று யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் செய்துள்ளார்.

### இரவல் நூல்களை ...

—1ம் பக்கத் தொடர்

ஒப்படைத்து அங்கத்துவ அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு ஆணையாளர் திரு சி. வி. கே. சிவஞானம் கேட்டுக் கொண்டுள்ளார்.

### இலங்கை தமிழர்....

—1ம் பக்கத் தொடர்

'ஓபின் விசா' மூலம் பிரிட்டனுக்குச் செல்வதற்கு வழங்கப்பட்டிருந்த சலுகை கடந்த 30ம் திகதியுடன் ரத்துச் செய்யப்பட்டது.

### நானூறு....

அனுப்புவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுவிட்ஸர்லாந்து அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### பயங்கரவாதம்....

—1ஆம் பக்கத் தொடர்

யிடுவது மரபல்ல. ஆனாலும் முன்னரிலும் இம்முறை பேச்சுவார்த்தை ஊக்கமளிக்கக் கூடியதாகவிருந்தது'' என்றும் சொன்ன அமைச்சர் லலித் அரசியல் தீர்வு எவ்வாறானதாக அமையலாமென்றோ அதற்கு பொது மக்கள் தீர்ப்பைப்பெற தேர்தல் நடக்குமா, சர்வஜன வாக்கெடுப்பு நடக்குமா என்பதை இப்போது கூறமுடியாதெனவும் குறிப்பிட்டார்.

பயங்கரவாதத்தினால் ஒரு பகுதி மக்கள் மட்டுமன்றி, சகல மக்களுமே கஷ்டப்படுகின்றனரென்றும் அமைச்சர் சொன்னார். திருகோணமலை போன்ற பகுதிகளில் சகல இன மக்களும் வாழ்வதால் அனைவருமே பாதிப்படைகின்றனர் எனவும் விபரித்தார்.

இந்திய மண்ணில் தமிழ் தீவிரவாதிகள் முகாமிட்டுள்ளது அனைவருக்கும் தெரியும். இந்தியா நினைத்தால் இதனை நிறுத்த முடியும். இரு நாட்டு உறவும் இப்போது மேம்பட்டுள்ளதால் அரசியல் தீர்வு காணவும், பயங்கரவாதத்தை ஒழிக்கவும் இந்தியா நிச்சயம் உதவுமென நம்புவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

''படையினர் விடும் சிறுதவறுகள் உலகில் பெரிதுபடுத்திக் காட்டப்படுகின்றது. ஆனால் தீவிரவாதிகளின் மனிதாபிமானமற்ற செயல்கள் பற்றியாரும் பேசுவதில்லை'' என்றும் அமைச்சர் குறைபட்டுச் சொன்னார்.

### பரந்தன் தொழிற்....

—1ம் பக்கத் தொடர்

சாயனக் கூட்டுத்தாபனத்தின் 1982ம் வருட அறிக்கை பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது அமைச்சர் தெரிவித்தார்.

அத்தனகல தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் ஜெயக்கொடி பேசுகையில் "பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை நிரந்தரமாகவே மூடப்பட்டுவிட்டது' என்று குற்றஞ்சாட்டினார்.

''அத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டு வந்த கோஸ்ரிக் சோடா முதலிய பல்வேறு இரசாயனப் பொருட்கள் தற்சமயம் இறக்குமதி செய்யப்படுகின்றன'' என்றார் அவர்

''தற்போதுள்ள சூழ்நிலையில் நாட்டின் வடக்கிலும், கிழக்கிலும் உள்ள கைத்தொழில் நிறுவனங்கள் சம்பந்தமாக அரசாங்கம் எத்தகைய நடவடிக்கையை எடுக்கப் போகிறது'' என்று அவர் வினவினார்.

மத்துகம தொகுதி உறுப்பினர் அனில் முனசிங்க, அக்மன தொகுதி உறுப்பினர் மகிந்த யாப்பா அபேரத்ன ஆகியோர் நாட்டின் வேறு பகுதிகளில் இரசாயனத் தொழிற்சாலைகள் நிறுவப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர்.

இந்த ஆலோசனை பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அமைச்சர் உறுதியளித்தார்.

தரமான
தங்க - வைர நகைகளை
எண்ணம் போல்
தெரிவுசெய்ய
யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
நியூ ஆனந்தா ஜுவலர்ஸ்
(வின்ஸர் தியேட்டருக்கு முன்)
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

படகில் வைத்து கைதானவர்களாம்

## பலாலி முகாமிலிருந்து 40 பேர் நேற்று விடுதலை

பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களில் நாற்பது பேர் நேற்று நண்பகல் விடுதலை செய்யப்பட்டார்கள். யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரின் சார்பில் க குமரையா பலாலி முகாமிற்கு நேரில் சென்று இவர்களைப் பொறுப்பேற்றார்.

விடுதலை செய்யப்பட்டவர்கள் அனைவரும் சில மாதங்களுக்கு முன்னர் படகொன்றில் சென்றுகொண்டிருக்கும் போது கைதுசெய்யப்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. இவர்களில் பத்து பேர் மன்னாரைச் சேர்ந்தவர்களாவர்.

நேற்று விடுதலை செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு:-

துரைசாமி துரைராஜலிங்கம், சேனுதிராசா கிருபைநாதன். நடராசா இளஞ்சந்திரன். நாராயணசாமி ராஜு, நல்லதம்பி சிவராசா, சின்னத்தம்பி வரதராசா, சுப்பிரமணியம் சிங்காரவேல். சிங்கராஜா குணபாலன், அருமைநாயகம் குணசாந்தன், மாரிசெட்டியார் ராஜேந்திரன், கணபதி பாக்கியராசா. நிமல் உபசேன, நாகர்பிச்சை மொஹமத் பரீட், சுப்பிரமணியம் ஜெயராஜசிங்கம். கிருஷ்ணபிள்ளை யோகநாதன், ரொபின்சன் தேவதாஸ் பவர், பொன்னம்பலம் திருமால்ரெட்டி, பரமசிவம் நகுலேஸ்வரம், கிருஷ்ணபிள்ளை திலோகநாதன், நாகரெட்டியார் ஷண்முகப்பெருமாள், ஆனந்தசாமி அருந்தவசிவநேசன், சங்கரப்பிள்ளை சிறிஸ்கந்தராஜா, இராசையா சூரியகுமார், இளையதம்பி சத்தியமூர்த்தி, மக்டொனால்ட் ரொட்றிகோ, லோறன்ஸ் அன்ரனி, அந்தோனிப்பிள்ளை பாக்கியராசா ஐயம்பிள்ளை லியோன் அன்ரன் பர்ணாந்து, ராமையா நடராஜா, அப்துல்காதர் பாரூக், அப்துல் மொஹமத் முபீம், ஐசேக் ராஜன், ஜெய்னுல் அப்தீன் நஸ்லி பசான், மொஹமட் அல் அயூப், அப்துல் மஜீத் மொஹமட் இஸதீன், அபீப் மொஹமட் ஆசன், ஸியாஉல் ஹமீட் தஸ்றுல்லா, அபுபக்கர் மன்சூர், மீராசாய்பு முஸ்தாயா, தணிகாசலம் சிறீகுமார்.

## வெளிநடப்பு

தமிழ்நாடு சட்ட சபையில் நேற்று திராவிட முன்னேற்றக்கழகம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட், ஜனதா ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

காலி செய்யப்பட்ட தங்கள் சட்டமன்றக்கட்சி அலுவலகங்களை திருப்பித்தரவில்லை என்றும் அதற்கான உறுதிமொழி எதுவும் கொடுக்கப்படவில்லை என்றும் கூறி அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அவர்கள் வெளிநடப்புச் செய்தார்கள்.

## ஒரு வேண்டுகோள்

3 - 6 - 85 திங்கள் இரவு 2.00 மணியளவில் எனக்குச் சொந்தமான 86 ஸ்ரீ 8102 இலக்கமுள்ள ஹொண்டா 200 மோட்டார் சைக்கிள், எனது பூநகரி இல்லத்தில் இருந்து இனம் தெரியாதவர்களால் பலாத்காரமாக எடுக்கப்பட்டுள்ளது நான் சுகயீனமாக உள்ளேன். இந் நிகழ்ச்சி எனது நிலையை மோசமாக்கியுள்ளது. தயவு செய்து எனது வாகனத்தை எடுத்தவர்கள் எனது சொந்தக் கஷ்டங்களையும், உடல்நலக் குறைவையும் கருத்தில் கொண்டு இயன்றளவு விரைவாகத் திருப்பித் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

சம்பந்தர் ஈஸ்வரானந்தன்
15, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்.

4-6-85

## சேவ்டி ட்ரவல்ஸ் முக்கிய அறிவித்தல்

யாழ். கொழும்பு பிரயாண சேவை மறு அறிவித்தல் வரை இடை நிறுத்தம் செய்யப் பட்டுள்ளது. பதிவு செய்தவர்கள் கட்டணம் மீட்டல், தொடர்ந்து பிரயாணம் செய்தல் பற்றி தயவு செய்து கூடிய விரைவில் தொடர்பு கொள்ளவும்.

''ஈழமுரசு'' சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 5-6-85 புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336

### உதய சிந்தனை

நமது உள்ளங்களை துருவிப் பார்க்க வேண்டும். அவற்றுல் தீய செயல்கள் விளைந்து விடாமல் கவனிக்க வேண்டும். ஏனெனில் நாம் விதைத்ததை நாமே அறுவடை செய்ய வேண்டியிருக்கும்.

-- புத்தர்

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்: தொலைபேசி: 23336

## இதய ஒலி

5-6-1985 புதன்கிழமை (குரோதன வைகாசி 23)

# மீண்டும் அந்த மா வட்ட சபை

உச்சிமகாநாட்டுக்காக பாரதம் போன ஜனாதிபதி ஜெயவர்த்தனுவும் குழுவினரும் தமது மூன்று நாள் விஜயத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்துவிட்டு நாடு திரும்பியுள்ளனர்.

இருநாட்டுத் தலைவர்களுக்குமிடையே முக்கால் மணி நேரம் நடைபெற்ற, உதவியாளர்கள் இல்லாத, அந்தரங்கமான பேச்சுவார்த்தையைத் தவிர, மற்றைய பேச்சுவார்த்தை விபரங்கள் எல்லாம் அறிக்கைகளாக வெளியிடப்பட்டுவிட்டன.

அமைச்சர்கள் மட்டப் பேச்சுக்கள், ஆலோசகர்கள் மட்டப் பேச்சுக்கள், அதிகாரிகள் மட்டப் பேச்சுக்கள் என்று பல்வேறு தரத்தில் 'சூறுவளிச் சந்திப்புகள்' இரண்டு நாட்களிலும் நடத்தப்பட்டுள்ளன.

விண்ணிலும் மண்ணிலும் புயல் வேகத்தில் பேச்சுக்கள் நடத்திய ஜனாதிபதியும் ராஜீவும், புயலினுல் பாதிக்கப்பட்ட பங்களாதேஷ் மக்களையும் நேரில் சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறியுள்ளனர்.

மீண்டும் டில்லி திரும்பிய தலைவர்கள் அரசியல் சூருவளியிலும், பயங்கரவாதப் புயலிலும் சிக்கி அனுதினமும் உயிரையும், உடைமைகளையும் இழந்து கொண்டிருக்கும் ஈழத் தமிழர்கள் பற்றி இரண்டாம் சுற்றுப் பேச்சு நடத்தியதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இலங்கை ஜனாதிபதியின் விஜய முடிவில் இரு நாடுகளாலும் விடுக்கப்பட்ட கூட்டறிக்கை அரசியல் ஞானிகளின் வார்த்தைப் பிரயோகங்களினுல் மிக நுணுக்கமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை வாசிப்பவர்கள் புரிந்து கொள்வர்.

இரண்டு வருட காலமாக ஆயிரக் கணக்கான உயிர்களைப் பலியெடுத்துக் கொண்டிருக்கும் இனப் பிரச்சினைக்குத் தீர்க்கமான ஒரு முடிவு காணப்படாமல், மயக்கமான அறிக்கையொன்றை வெளியிட்டதன் மூலம், பயமும், சந்தேகமும் அதிகரிக்கச் செய்யப்பட்டுள்ளதெனவே தமிழ மக்கள் கருத முடிகின்றது.

"நெருக்கடி நிலையைப் போக்க உடனடியாக நடவடிக்கை; நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதிக்காது அரசியல் தீர்வு; சகல தரப்பிலும் வன்செயல் நிறுத்தப்பட வேண்டும்" என்று பழைய கதையையே மீண்டும் சொல்வதால் பிரச்சினைகள் தீர்ந்து விடுமா?

இனப் படுகொலைகள் நிறுத்தப்பட்டுவிடுமா?

முடிவு காணுமல் முடிந்த சர்வகட்சி மகாநாடும், இறுதித் தீர்வு காணப்படாது முடிந்த 'உச்சி மாநாடும்', தமிழ் மக்களுக்கு இருந்துவந்த அற்ப சொற்ப நம்பிக்கையையும் இழக்கச் செய்து வருகின்றன.

அரசியல் தீர்வுக்கான சரியான சூழ்நிலையொன்று உருவாக்கப்பட வேண்டுமெனவும் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அந்தச் சூழ்நிலையை யார் ஏற்படுத்துவது? அரசாங்கமா, சாதாரண பொதுமக்களா?

சரியான திட்டமொன்றில்லாமல், அரசியல் தீர்வை எவ்வாறு காண முடியும்?

டில்லி விமான நிலையத்தில் கடைசி நிமிடத்தில் ஜனாதிபதி தெரிவித்த ஆலோசனைகள் அரசியல் தீர்வுக்கு வழி சமைக்குமா?

மாகாண சபையையே ஏற்க முடியாதென்று அறிவிக்கப்பட்ட பின்னர், மீண்டும் மீண்டும் மாவட்ட சபைதான் என்று சொல்வது எதனைக் குறிக்கின்றது?

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இயங்கிய மாவட்ட சபைகளுக்கு என்ன நடந்தது? அதனைத் தமிழ் மக்கள் ஏன் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது ஜனாதிபதிக்குத் தெரியாததல்ல.

அதிகாரங்களற்ற மாவட்ட சபைகள் இன்றைய நிலையில் தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவை என்பதைத் தெரிந்துகொண்டும "அடிப்படையில் மாவட்ட சபை; இயங்கத் தொடங்கிய பின்னர் ஒருங்கிணைப்பு சபை பற்றிப் பரிசிலனை" என்பது தமிழ் மக்களை தங்கள் எதிர்காலத்தில் மேலும் நம்பிக்கையிழக்கச் செய்வதாகும்.

இந்த நாட்டின் சகல நிறைவேற்று அதிகாரங்களையும் தன்னிடத்தே கொண்ட அதி உத்தம ஜனாதிபதி அவர்கள், ஏற்கனவே போடப்பட்ட 'வட்டத்திற்கு' வெளியே வந்து, தமிழர் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய அதிக அளவு அதிகாரம் கொண்ட சபைகளை உருவாக்க முன்வர வேண்டும்.

பாரதம் அமைத்துக் கொடுத்திருக்கும் நல்லதொரு சூழ்நிலையை சரியாகப் பயன்படுத்தினுல், எதிர்காலத்தில் உள்நாட்டுப் பிரச்சினை என்பதற்கே இடமில்லாமற் போய்விடும்.

முதலில் மாவட்ட சபைகளை கைவிடுவதே சாலச் சிறந்தது. அதுவே நம்பிக்கையையும் ஏற்படுத்தும்.

ராஜீவ் இன்று வெளிநாட்டு விஜயம்:

# அமெரிக்க உறவு வலுப்பட உதவும் என்பதில் நம்பிக்கை

(புதுடில்லி)

பாரதப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி நான்கு நாடுகளுக்கான தனது இருவாரகால விஜயத்தை இன்று ஆரம்பிக்கவிருக்கிறர். அமெரிக்கா, பிரான்ஸ், எகிப்து, அல்ஜீரியா ஆகிய நான்கு நாடுகளுக்குமே அவர் விஜயம் மேற்கொள்கிறர். பிரதம மந்திரியாகப் பதவியேற்றுக் கொண்டபின்னர் முதல் தடவையாக உலகின் மிகப்பெரும் வல்லரசு நாடுகளில் ஒன்றுன அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வமாக திரு காந்தி மேற்கொள்ளும் இவ்விஜயம் சர்வதேச ரீதியில் அதிமுக்கியத்துவம் பெற்றதாகக் கருதப்படுகிறது கடந்த மாதம் அவர் சோவியத் யூனியன் விஜயத்தை மேற்கொண்டிருந்தார் பிரதம மந்திரியின் அமெரிக்க விஜயம் குறித்து வெளியுறவு செயலாளரான திரு ரொமேஷ் பண்டாரி பல விபரங்களை செய்தியாளரிடம் வெளியிட்டுள்ளார் "பாகிஸ்தான் அதிநவீன ஆயுதங்களை அளவுக்கதிகமாக வாங்கிக் குவிக்கிறது அணுக்குண்டுத் தயாரிப்பு முனைவையும் அந்நாட்டின் செயல்கள் எடுத்துக் காட்டுகின்றன. இதைத்தடுக்கக்கூடிய அமெரிக்கா கண்டும் காணுதது போல் இருந்து வருகிறது" என்ற பிரதம மந்திரியின் குற்றச்சாட்டை அவர் அமெரிக்க ஜனாதிபதி திரு. றெனுல்ட் றீகனிடம் நேரில் எடுத்துரைப்பார் என்று திரு பண்டாரி தெரிவித்தார்.

தெற்காசிய நாடுகளின் பிரகடனம் குறித்தும் அணுசேரா நாடுகள் இயக்கத்தின் தலைவர் என்ற வகையில் திரு. காந்தி



அவரிடம் விளக்குவார் என்றும் அவர் சொன்னர். அமெரிக்கா பாரதத்தின் மிக நெருங்கிய வர்த்தகக் கூட்டாளி என்றும் நட்பு அடிப்படையில் இரு நாடுகளும் ஒன்றையொன்று புரிந்து கொள்ள இப்பயணம் வாய்ப்பளிக்கும் என்றும் சொன்னர் அவர்.

இரு நாடுகளுக்குமிடையிலான நட்பு சமத்துவம், பரஸ்பர புரிந்துணர்வு என்ற அடிப்படையில் அமையும் என்றும் ஒரு நாட்டின் நட்பால் மற்ற நாட்டின் உறவுக்குப் பாதிப்பு ஏற்படாத விதத்தில் இது உருவாக்கிக் கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

பிரான்ஸ் ஜனாதிபதி திரு. மித்திரோனைப் பிரதம மந்திரி சந்திக்கும் போது இருதரப்பு உறவு மற்றும் சர்வதேச விடயங்கள் ஆராயப்படுமென்றும் அவர் சொன்னர்.

எகிப்து, அல்ஜீரிய விஜயம் குறித்து அவர் பிரஸ்தாபிக்கையில், சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் பெற்ற நாடுகள் இவை, அணுசேரா நாடுகள் இயக்கத்திலும் உறுப்புரிமை பெற்றவை இந்நாடுகளுடனுன நெருங்கிய உறவு குறித்து விரிவாக ஆராயப்படும்" என்று அவர் சொன்னர்.

பாரதப் பிரதம மந்திரியின் விஜயம் மிகஆவலுடன் அமெரிக்காவினுல் எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது என்பதும் இலங்கைப் பிரச்சினை குறித்து அமெரிக்க முக்கியஸ்தர்கள் திரு ராஜீவ்



காந்தியுடன் ஆராய ஆவல் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர் என்பதும் ஈண்டு மேலும் குறிப்பிடத்தக்கவை.

## நரசிம்மராவுடன் 'லலித்' மூன்று தடவைகள் சந்திப்பு!

(புதுடில்லி)

இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவையும் குழுவினரையும் புதுடில்லி விமான நிலயத்தில் ஜனாதிபதி திரு. ஜெயில்சிங், பிரதமமந்திரி திரு. ராஜீவ் காந்தி, வெளியுறவு இணையமைச்சர் திரு குர்ஷித் ஆலம்கான், வெளியுறவுச் செயலர் திரு ரொமேஷ் பண்டாரி முதலானோர் வழியனுப்பி வைத்தனர்.

புதுடில்லியில் தங்கியிருந்த போது இலங்கைதேசியபந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி பாரத பாதுகாப்பு அமைச்சர் திரு. பி.வி. நரசிம்மராவை மூன்று தடவைகள் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்தினர் என்று புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

## இந்திரா கொலை; விசாரணை கமிஷனின் காலம் நீடிப்பு!

(புதுடில்லி)

மாஜிப் பிரதம மந்திரி இந்திரா காந்தி கொலைச் சம்பவம் குறித்து விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட நீதிபதி தக்கார் விசாரணைக் கமிஷனின் காலத்தை அரசு மேலும ஆறு மாத காலத்துக்கு நீடித்துள்ளது.

நவம்பர் பதினென்றில் அமைக்கப்பட்ட இக் கமிஷன் மே மாதம் தனது அறிக்கையைச் சமர்பிக்க வேண்டும் என்று முன்னர் பணிக்கப்பட்டிருந்தது.

சூறுவளி அனர்த்தம் அறிய

## பாகிஸ்தான் ஜனாதிபதியும் பங்களாதேஷ் செல்கிறர்

(கராச்சி)

பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஷியாவுல் ஹக் தலைமையில் வெளிவிவகார அமைச்சர் யாக் கூப்கான் மற்றும் உயரதிகாரிகள் கொண்ட குழு இன்று பங்களாதேஷ் புறப்பட்டுச் செல்கிறது.

சூருவளி பாதித்த இடங்களைப் பார்வையிட்ட பின் இக் குழுவினர் ஜனாதிபதி எர்ஷாத்தையும் சந்தித்து உரையாடுவர் என்றும் பாகிஸ்தான் வானெலி தெரிவித்தது.

## கிரேக்க தேர்தல்

(ஏதென்ஸ்)

கிரேக்கத்தில் பிரதம மந்திரி திரு. பப்பன்ரோவின் மக்கள் சோஷலிஸ்ட் கட்சியே மீண்டும் ஆட்சியமைக்கும் வலுவினைப் பெற்றுள்ளது.

எழுபது இலட்சம் வாக்காளரில் ஐம்பது வீதமான வாக்குகள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கையில் நாற்பத்து ஆறு வீதமான வாக்குகளை அவரது கட்சியே பெற்றிருந்தது.

## மறுப்பு

(டாக்கா)

சூருவளி விளைவுகளை முன்கூட்டியே தவிர்த்துக் கொள்ளும் எச்சரிக்கை நடவடிக்கையினின்றும் தாம் வழுவி விட்டதான குற்றச்சாட்டை பங்களாதேஷ் அரசு மறுத்துள்ளது.

## கைது

(லண்டன்)

முந்நூறு பொப் இரசிகர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த அசம்பாவித வேளை பல பொதுமக்களும் காயமடைய நேரிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## பீக்கிங் தகவல்

(பீக்கிங்)

சீனப் பிரதம மந்திரி ஷியோ ஷியாங்கின் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தின்போது அவர் வர்த்தக உறவில் நாட்டம் செலுத்துவதுடன் உலக சமாதானத்தின் அவசியம் குறித்தும் வலியுறுத்துவார் என்று பீக்கிங் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

## இந்திரா பெயரில் கப்பல்

(மாஸ்கோ)

உலக சமாதானத்துக்காக உண்மையுடன் உழைத்த திருமதி இந்திரா காந்தியைக் கௌரவித்து சோவியத் யூனியனின் கப்பல் கம்பனி ஒன்று தனது பிரமாண்டமான கப்பல் ஒன்றுக்கு அவரது பெயரைச் சூட்டியுள்ளது. இருநூற்றைம்பது மீட்டர் நீளமுள்ள இக்கப்பல் நாற்பதாயிரம் தொன் எடையை ஏற்றிக் கொள்ளக் கூடியது.

## புதிய முதல்வர்

(பம்பாய்)

மகாராஷ்டிர முதலமைச்சராக திரு. சிவாஜி ராவ் பட்டேல் நிலங்கேஸ்கர் பதவியேற்றுள்ளார்.

மகாராஷ்டிரத்தின் பதினேராவது முதலமைச்சரான இவர் அமைச்சரவை குறித்து ஆலோசிக்க புதுடில்லி விரைந்தார்.

## சைவ பரிபாலன சபையின்

# சைவசமய பாடப் பரீட்சை: பரிசுபெறும் மாணவர்கள்

(சித்தன்கேணி)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினர் அகில இலங்கை ரீதியில் 1984ம் ஆண்டு சைவ சமய பாடப் பரீட்சையில் அகில இலங்கைப் பரிசு பெறுபவர்கள் விபரம் பின் வருமாறு:- மூவர் தங்கப் பதக்கப் பரிசு பெற்றுள்ளனர்.

வகுப்பு 12-செல்வி ந. இராசநிதி (1ம் பரிசு) இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம். செல்வி இ. சந்திரமலர் (2ம் பரிசு) கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம். செல்வி க. ஜெயராணி (3ம் பரிசு) வித்தியானந்தாக் கல்லூரி, முள்ளியவளை.

வகுப்பு 11 செல்வி க. கமலவேணி (1ம் பரிசு) வயாவிளான் ம. ம. வித்தியாலயம், செல்வி து. அருட்செல்வி (2ம் பரிசு) கொக்குவில் இந்துக்கல்லூரி. செல்வி ப. கிருஷ்ணபவானி (3ம் பரிசு) வேம்படி மகளிர் கல்லூரி.

வகுப்பு 10-செல்வி கு. பிறேமலதா (1ம் பரிசு) (தங்கப்பதக்கப் பரிசு) இராமநாதன் கல்லூரி, செல்வன் மு. ஐங்கரன் (2ம் பரிசு) இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம். செல்வி வே. பூங்கோதை (3ம் பரிசு) சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

வகுப்பு 9 - செல்வி மா. சிவாணி (1ம்பரிசு) (தங்கப்பதக்கப் பரிசு) இந்து மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம். செல்வி ம. மனோரஜனி (2ம் பரிசு) தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி. செல்வி நா. மாலா (3ம் பரிசு) பெரியபுலம் ம. வித்தியாலயம்.

வகுப்பு-8 செல்வி இ ரோகிணி (1ம் பரிசு) (தங்கப்பதக்கப் பரிசு) வேம்படி மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம். செல்வி க. கீதாஞ்சலி (2ம் பரிசு) மெதடிஸ்த மகளிர் கல்லூரி, பருத்தித்துறை. செல்வன் இ. சேந்தன் (3ம் பரிசு) இந்துக் கல்லூரி யாழ்ப்பாணம்.

வகுப்பு 7 செல்வி ந. அனுராதா (1ம்பரிசு) இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் செல்வி ச. சந்திரகலா (2ம் பரிசு) பாக்கிய மகா வித்தியாலயம், மாதனை செல்வி அ. வாசுகி (3ம் பரிசு) அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்.

வகுப்பு 6 செல்வி ஏ. சிவதர்சினி (1ம் பரிசு) நல்லூர் இந்து தமிழ்ப் பெண் பாடசாலை. செல்வன் சு. முகுந்தன் (2ம் பரிசு) கொக்குவில் இந்துக் கல்லூரி. செல்வன் க. அம்பிகாபதி (3ம் பரிசு) கன்னங்கரா ம.வி. கலுத்துறை.

வகுப்பு 5 செல்வி ந. மதுராங்கனி (1ம் பரிசு) இந்து ஆரம்பப் பாடசாலை, யாழ்ப்பாணம். செல்வி. மா. வனஜா (2ம் பரிசு) கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம், செல்வன் ச. சிவகுமார் (3ம் பரிசு) கட்டுடை சைவ வித்தியாசாலை.

வகுப்பு 4 செல்வன் கை. சுதர்சன் (1ம் பரிசு) அ.இ.க. பாடசாலை, முள்ளியவளை. செல்வன் யோ. ஜெயகாந் (2ம் பரிசு) புனித மரியாள் வித்தியாலயம் யாழ்ப்பாணம். செல்வி. சி. சிவகலா (3ம் பரிசு) காசிநாதர் வித்தியாலயம், துன்னாலை.

வகுப்பு 3 செல்வி அ. லிங்கா 1ம் பரிசு இளையதம்பி வித்தியாலயம், யாழ்ப்பாணம். செல்வி தி. ஹேமாவதி (2ம் பரிசு) உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம். செல்வி தி. சுதந்தரி (3ம் பரிசு) புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.

வகுப்பு 2 செல்வன் பா. சிவரஞ்சன் (1ம் பரிசு) வலந்தலை வடக்கு அ. மி. பாடசாலை, காரைநகர். செல்வி த. தர்ஷினி (2ம் பரிசு) ஆனைப்பந்தி மெ.மி.த.க. பாடசாலை செல்வி த. ரதிகலா (3ம் பரிசு) கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்.

கூடிய மாணவர்களைப் பரீட்சைக்குத் தோற்றச் செய்த வகையில் பின்வரும் பாடசாலைகள் பரிசு பெறுகின்றன:- சாவகச்சேரி இந்துக் கல்லூரி (1ம் பரிசு வேம்படி மகளிர் கல்லூரி (2ம் பரிசு) மெதடிஸ்த பெண்கள் உயர் கல்லூரி (3ம் பரிசு) பருத்தித்துறை.

## காணவில்லை

குருநகர் 41/2, ஓடக்கரை வீதியைச் சேர்ந்த துரைச்சாமி செல்லக்குமார் (செல்வம்) என்பவரை 1. 6. 85 முதல் காணவில்லை. 17 வயதுடைய சிவந்த தோற்றமுடைய இவர் ஒரு சித்த சுவாதீனமற்றவர். மெலிந்த தோற்றமுடையவர், கடைசியாக பச்சையும் மஞ்சளும் கலந்த சாரமும், மண்ணிறமும் வெள்ளையும் கலந்த ஷேட்டும் அணிந்திருக்க காணப்பட்டார். இவரைப் பற்றிய தகவல் தெரிந்தோர் தயவு செய்து கீழ்க்குறிப்பிட்ட விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**அதிகாரம் துரைச்சாமி**
41/2, ஓடக்கரை வீதி, அண்ணா சிலைக்கருகாமை
குருநகர்

அரியாலை பாலசுப்பிரமணியம் செல்வபாலாவுக்கு

## உருக்கமான வேண்டுகோள்

உமக்கு ஏதேனும் ஒன்று நடந்தால் நாம் எல்லோருமே அடியோடு அழிந்து விடுவோம். எங்கள் அன்புக்குள் இருக்கும் ஒரேயொரு மகனும், அருமைத் தம்பியும் நீங்கள் என்று உங்களுக்கே தெரியும். இனிமேல் உமது மனதைப் புண்படுத்த நாம் எதையும் செய்யமாட்டோம். உமது வெளியேற்றத்தால் நாம் மன வேதனையில் மூழ்கியுள்ளோம். நீர் வரும் வரை உண்ணாமல் உறங்காமல் இருப்போம். உமது அம்மா, அக்காவின் நிலை மிக மோசமாக இருக்கிறது. நீர் 30-5-85 அன்று இராணுவத்தினரால் பிடிபடவில்லை என்பது திட்டவட்டமாகத் தெரிய வருகிறது. எம் நிலையை உணர்ந்து சீக்கிரம் வீடு வந்து சேரவும்.

உமது வெளியேற்றத்தால் தாங்கொணாத் துயருறும்
பெற்றோர், சகோதரிகள்,
நெருங்கியோர், உறவினர்கள்

## பூவரசு மரத் தண்டனை

சுண்டிக்குளம் என்னுமிடத்தில் ஒருவர் துப்பாக்கி காட்டி பொதுமக்கள் மத்தியில் சில சமூக விரோத செயலில் ஈடுபட்டு வந்தார். இச்செய்தி ஒரு இளைஞர் குழுவின் காதுக்கு எட்டவே அவர்கள் அந்த நபரைப் பிடித்து பூவரசு மரம் ஒன்றில் கட்டி வைத்து நல்ல 'சாப்பாடு' கொடுத்தனர். அப்போதுதான் அவர் வைத்திருந்தது போலித் துப்பாக்கி என்னும் விடயம் புரிந்தது. இதன் பிறகு அந்த நபரின் நடத்தையில் நல்ல அமைதி தென்படுகின்றது.

## வரி விளம்பரம்

### கல்வி

பருத்தித்துறை Y M.C.A. வகுப்புகள் ஆத்தியடியில் பாதுகாப்பான ஒரு இடத்தில் தற்போது நடைபெற்று வருகின்றது. 5 - A/L 86 87, G.C.E. O/L மீட்டற் பயிற்சி வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் 10-6-85 வரை கோரப்படுகின்றன மிகவும் திறமையுள்ள ஆசிரியர்களின் கற்பித்தல் கிடைக்கும். மெதடிஸ்த திருச்சபை, பருத்தித்துறை.

### பயிற்சி

I. C. M. A. செக்ஷன் A நவெம்பர் 1985 பரீட்சைக்குரிய வகுப்பு பாதுகாப்பான சூழலில் ஆரம்பிக்கப்பெற்றிருக்கிறது சனி ஞாயிறு போயா தினங்கள் முற்பகலில் மட்டும் சில காலி இடங்கள் உண்டு. வன்னியசிங்கம் B.com (Lond) M. Sc (Econ) (Lond) வைரவர் கடாட்சம், பலாலி வீதி, திருநெல்வேலி, AGA காரியாலயத்திற்கருகே.

### விற்பனைக்கு

மின்சாரத்தில் இயங்கும் தச்சுத் தொழில் இயந்திரம் விற்பனைக்குண்டு. சகல விபரங்களுக்கும் கீழ்க்காணும் இரு முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம். 1. ஆ. வேலும் மயிலும், சடையாளி, காரைநகர். 2. சித்தப்பாகடை, 231, திருநகர், கிளிநொச்சி.

### சாரதிகட்கு

பிள்ளையார் லேணேர்ஸ், 94, முனியப்பர்கோவில்வீதியிலிருந்து தற்காலிகமாக கட்டைப்பிராய் கோப்பாய் தெற்கிலுள்ள எமது இல்லத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. உங்கள் லைசென்ஸை குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும். பிள்ளையார் லேணேர்ஸ், கட்டைப்பிராய், கோப்பாய் தெற்கு.

### வாடகைக்கு

கோப்பாய் சந்திக்கருகாமையில் கடைகள் வாடகைக்கு இருக்கின்றன. விபரங்களுக்கு: ஏல விற்பனை நிலையம், கோப்பாய்,

### பயிற்சி

ரெலிவிசன். வீடியோ டெக்னிப்பியறிங், எலக்றிக்கல் வயறிங், Hotel Management, French கூடிய செய்முறைப் பயிற்சியுடன் நடைபெறுகின்றன. ஆரம்பம் 06-06-1985. வந்து பயிற்சி பெறமுடியாதவர்கள் தபால் மூலம் இப்பயிற்சிகளை கற்கலாம். விபரங்களுக்கு முத்திரையொட்டிய தபால் உறையை அனுப்பி பெற்றுக் கொள்ளவும். Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி (றெயில்வே கடவையருகாமை), யாழ்ப்பாணம்.

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**




✳ கைதடி கிழக்கு கனகலிங்கம் பவளம் தம்பதிகளின் மகன் சசிக்குமார் இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✳ கைதடி கிழக்கு அருணசலம் கமலாதேவி தம்பதிகளின் மகள் தனுசுஜா இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✳ யாழ் காதி அபூபக்கர் வீதி மஹ்றூப் பஸ்மிலா தம்பதிகளின் மகள் பாத்திமா இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ சரவணை கிழக்கு வன்னியசிங்கம் மதியழகி தம்பதிகளின் மகள் நிரஞ்சனி இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ கைதடி கிழக்கு குணரத்தினம் மகேஸ்வரி தம்பதிகளின் மகள் சுகிர்தா இன்று தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✳ யாழ்-நாவலர் வீதி ஆனந்த நடராஜா செல்வநாயகி தம்பதிகளின் மகன் சுஜீவன் இன்று தனது ஐந்தாவது பிறந்த நாளை கொண்டாடுகிறார்.

✳ யாழ்-ஒட்டுமடம் சோமசுந்தரம் புனிதவதி தம்பதிகளின் மகன் சபேசன் இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ யாழ்-இராசவீதி சண்முகநாதன் பற்றிமா தம்பதிகளின் மகன் சஞ்செயன் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

## திருமதி ஆனந்தக்குமாரசாமியின்

# கண்டிப்பு கடமையுணர்வு திறமைக்கு எடுத்துக்காட்டு

(இருபாலை)

கடமையை கடமைக்காக அவர் புரியவில்லை கலாசாலையின் கடமையில்தான் அவர் திருப்தியும் மகிழ்ச்சியும் கண்டார். கடமையை கடமைக்காக அவர் புரிந்திருப்பாரானால் ஆரம்பக் கல்வி என்ற ஒரு பிரிவோடு தான் திருப்தியடைந்திருக்கலாம்.

இவ்வாறு கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்ற முன்னாள் அதிபர் திருமதி ஆ. ஆனந்தக்குமாரசாமி அவர்களின் சேவை நலன் பாராட்டு விழாவில் கலாசாலை அதிபர் செல்வி க. சின்னப்பு கூறினார்.

கலாசாலை ''ஸ்தப்தகம்'' மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் அதிபர் செல்வி ச. சின்னப்பு தொடர்ந்து பேசுகையில் மனையியல் என்ற இனிமையையும் சமயம் என்ற வீரத்தையும், தமிழ் என்ற பெருமையையும் ஒருங்கே கொண்ட இனிய கதம்பத்தை ஆக்கிக் கொடுத்தவர் திருமதி ஆனந்தக்குமாரசுவாமி, அவர் திறமையான ஒரு மாலுமியைப் போல் கட்டுப்பாடு, ஒழுங்கு என்ற சுக்கானைப் பிடித்தவராகவும் இறைபக்தியறிவைக் கொண்டவராகவும் தன் நிர்வாகத்தை மிகத் திறமையாகச் செய்துள்ளார் என்றார்.

பிரதம கல்வியதிகாரி திரு. ஆர். சுந்தரலிங்கம் உரையாற்றுகையில் கடமையுணர்வும் கண்டிப்பானநிர்வாகமும்தான் அவருடையதிறமைக்கு மிகவும் எடுத்துக்காட்டுஎன்றுகூறினார்.

மாணவர் தலைவர் செல்வன் ஞா. திருக்கதீஸ்வாநாதன் உரையாற்றுகையில் கலாசாலை என்றால் திருமதி ஆனந்தக்குமாரசாமியின் ஞாபகமும் நிர்வாகமும் தான் முன்னிற்கும் என்றார்.

எழுத்தாளர் செங்கை வை. கா. சிவப்பிரகாசம், திரு. சி. சண்முகலிங்கம் திரு. சி. செல்லத்துரை பழைய மாணவிகள் சார்பில் திருமதி. ச. சிவானந்தம் ஆகியோரும் உரையாற்றினர்.

## மின்சாரசபை நடவடிக்கை

(ஒட்டுசுட்டான்)

யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவுக்கு மின்சார உபகரணங்கள் மாங்குளம்-ஒட்டுசுட்டான் வீதியால் கொண்டு செல்லப்படுகையில் அனுமதிப் பத்திரம் இருந்தும் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாம்.

ஊழியர்களையும் உபகரணங்களையும் மீட்பதற்கு மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளதாக அறியப்படுகிறது.

6ஆம், 7ஆம் 8ஆம் 9ஆம் 10ஆம் தரங்களுக்கான

## தமிழ் மொழிப் பாட நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | தமிழ் மொழிப் பாடப் பயிற்சிகள் (10ஆம்தரம்) திருத்திய மூன்றும் பதிப்பு | ரூ 12.00 |
| 2. | புதுமுறைத் தமிழ் மொழிப் பயிற்சி (8ஆம் தரம்) | ரூ 6.40 |
| 3. | புதுமுறைத் தமிழ் மொழிப் பயிற்சி (7ஆம் தரம்) | ரூ 6.75 |
| 4. | புதுமுறைத் தமிழ் மொழிப் பயிற்சி (6ஆம் தரம்) | ரூ 7.30 |
| 5. | கட்டுரை மஞ்சரி (9ஆம் 10ஆம் தரம்) | ரூ. 16.30 |
| 6. | அடிப்படை இலக்கணம் (9ஆம் 10ஆம் தரம்) | ரூ. 17.20 |
| 7. | கட்டுரை மஞ்சரி (6ஆம் தரம்) | ரூ. 5.60 |
| 8. | ஒத்த கருத்துச் சொற்களும் எதிர் கருத்துச் சொற்களும் (9ஆம் 10ஆம் தரம்) | ரூ. 8.20 |

ஆக்கம்: பண்டிதர் சு. வேலுப்பிள்ளை (சு. வே)

**வெளியீடு: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை**
235, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்)